# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**வடக்கு மற்றும் தெற்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்படும் 3 வீடமைப்பு திட்டங்களுக்கான நிதி பங்களிப்பை இந்தியா இருமடங்காக அதிகரித்தது**

இலங்கையில் முன்னெடுக்கப்படும் உயர் பெறுபேற்று சமூக அபிவிருத்தி திட்டங்கள் பலவற்றுடன் மூன்று வீடமைப்பு திட்டங்களுக்கான நிதி உதவியினை இந்திய அரசாங்கம் அதிகரித்துள்ளது; இதன் கீழ் வடக்கு கிராம சக்தி, தெற்கு கிராமசக்தி 1 மற்றும் தெற்கு கிராமசக்தி 2 ஆகியவற்றுக்காக இவ்வாறான உதவி நீடிக்கப்பட்டுள்ளதுடன் 2017 ஒக்டோபர் ,மற்றும் 2018 ஒக்டோபரில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைகளின் அடிப்படையில் இவ்வாறான திட்டங்களுக்கான நிதி உதவி அதிகரிக்கப்பட்டுள்ளது.

2. புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் வடக்கு மற்றும் தெற்கு மாகாணங்களில் உள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் தமது சொந்த முயற்சியில் வீடுகளை நிர்மாணிப்பதற்காக இந்திய அரசாங்கம் 500,000.00 இலங்கை ரூபாவை வழங்கி வருகின்றது. இந்நிலையில் கொவிட் 19 க்கு பின்னர் சந்தையில் ஏற்பட்டிருக்கும் பொருட்களின் விலை ஏற்றம் காரணமாகவும், 2022 இல் இலங்கை முழுவதும் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாகவும், ஏற்கனவே வழங்கப்பட்ட நிதி உதவியின் கீழ் குறித்த திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு பயனாளர்கள் சவால்களை எதிர்கொண்டிருந்தனர். இந்நிலையில், இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக இந்த திட்டத்தின் கீழான ஒவ்வொரு வீடுகளுக்கும் குறித்த உதவி தொகையினை இரட்டிப்பாக்கி இலங்கை ரூபா 1,000,000.00 ஆக அதிகரிப்பதற்கு இந்திய அரசாங்கம் இணங்கியுள்ளது.

3. இந்த திட்டத்துக்காக மீளமைக்கப்பட்ட உதவியினை உறுதிப்படுத்தும் இராஜதந்திர கடிதங்கள் உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா மற்றும் வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் நீர் விநியோகத் துறை அமைச்சின் செயலாளர் எந்திரி எல்.பி.குமுது லால் ஆகியாரால் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் 2025 டிசம்பர் 30 ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வில் பரிமாறிக்கொள்ளப்பட்டது. மீளமைக்கப்பட்டுள்ள உதவி திட்டங்களின் கீழான மூன்று வீடமைப்பு செயல்திட்டங்கள் மூலமாக 1550க்கும் அதிகமான குடும்பங்கள் பயனடையவுள்ளன.

4. மக்களை இலக்காகக் கொண்ட இந்தியாவின் அபிவிருத்தி ஒத்துழைப்பு திட்டங்களில், இலங்கை மக்களின் நாளாந்த வாழ்வில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் பல துறைகளில் 'வீடமைப்பு' மிக முக்கிய இடம் வகிக்கின்றது. இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மற்றும் பெருந்தோட்டப் பகுதிகளில் இந்திய வீடமைப்பு திட்டத்தின் கீழ் கிட்டத்தட்ட 50,000 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்

நான்காம் கட்டத்தின் ஒரு பகுதியாக மேலும் 10,000 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், டிசம்பர் 30 ஆம் திகதியன்று நிதி உதவி அதிகரிக்கப்பட்ட மூன்று கிராம சக்தி திட்டங்களுக்கு மேலதிகமாக, இலங்கையில் ஏனைய HICDP திட்டங்களையும் இந்தியா செயல்படுத்தி வருகிறது. இதில் நாடளாவிய ரீதியில் உள்ள 25 மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் குறைந்த வருமானம் கொண்ட 24 குடும்பங்களுக்கான வீடமைப்பு வசதிகளை உள்ளடக்கிய மாதிரி கிராமத் திட்டம்; மன்னாருக்கு அருகிலுள்ள மடு தேவாலயத்திற்கு வருகை தரும் யாத்திரிகர்களுக்கான இடைத்தங்கல் வீடுகள்; மற்றும் அனுராதபுரத்தில் அண்மையில் பூர்த்திசெய்யப்பட்ட சங்கைக்குரிய ஷோபித நஹிமிகம திட்டம் உள்ளிட்டவை அடங்கும். மேலும், டித்வா புயலுக்கு பின்னர் இந்திய அரசாங்கம் அறிவித்த இலங்கைக்கான 450 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான மீள்நிர்மாண மற்றும் மீட்பு தொகுப்பின் கீழ் முழுமையாகவும் பகுதியளவிலும் சேதமடைந்த வீடுகளைக் நிர்மாணிப்பதற்கான உதவியும் முன்மொழியப்பட்டுள்ளது.

************

**கொழும்பு**
**30 டிசம்பர் 2025**